[2019 ஜூலை 15

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே மலர்களுக்கான ஓர் ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அருகிலுள்ள மாவட்டமான கோயம்புத்தூரிலே அனைத்து வகையான தாவரங்களுக்கும் மற்றும் அனைத்து வகையான விவசாயத்திற்கும் தேவையான ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. தேவையான அனைத்தையும் அங்கேயிருந்து பெற்றுக்கொள்ளலாம். தனியாக ஓர் ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது இல்லை. இருந்தாலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வுகள் மேற்கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

108—

வீட்டுமனைப் பட்டா

***26453—திரு. பி. முருகன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *வேப்பனஹள்ளி தொகுதி, பீமாண்டபள்ளி ஊராட்சியிலுள்ள விவசாயிகளுக்கு வீட்டுமனைப் பட்டா மற்றும் நிலப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர் குல சாமி அம்மா அவர்களின் அருளாசியோடு, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைகளை இன்றைக்கு தாக்கல் செய்கிற, தாய்த் தமிழ்நாட்டின் சாமானிய முதல்வராக சாதனை சரித்திரம் படைத்து வருகிற பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு வணக்கங்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2019 ஜூலை 15]

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கொல்லப்பள்ளி வருவாய்க் கிராமப் புல எண் 1–ல், மேய்ச்சல்தரை புறம்போக்கு நிலத்தில் 45 நபர்களும், பீமாண்டபள்ளி கிராமப் புல எண் 202-ல், மேய்ச்சல்தரை புறம்போக்கு நிலத்தில் 21 நபர்களும் மற்றும் புல எண் 203/1–ல், மேய்ச்சல்தரை புறம்போக்கு நிலத்தில் 5 நபர்களும், ஆக மொத்தம் 71 நபர்கள் வீடு கட்டி சுமார் 20 ஆண்டுகளாகக் குடியிருந்து வருகின்றார்கள். ஆனால், அரசாணை (நிலை) எண் 186, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை, நாள் 11–12–2001–ன்படி, மேய்ச்சல்தரை புறம்போக்கு நிலங்களை வேறெந்த உபயோகத்திற்கும் பயன்படுத்தக் கூடாது என்பதால், மேற்கண்ட குடும்பங்களுக்கு பட்டா வழங்க தற்போது இயலவில்லை. இருப்பினும், மேற்படி வீடு கட்டி குடியிருந்து வரும் நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலம் ஏதும் பீமாண்டபள்ளி கிராமத்தில் இல்லாததால், மேற்படி கிராமத்திற்கு அருகிலுள்ள சென்னசத்திரம் கிராமத்திற்கு இடம் மாறி, குடியேற சம்மதிக்கும்பட்சத்தில் சென்னசத்திரம் கிராமம், அரசு புறம்போக்கு புல எண் 100/1–ல், 0.78.50 ஹெக்டேர் பரப்பு மாற்று இடத்திலே மேற்படி குடும்பங்களுக்கு தகுதியின் அடிப்படையிலே, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

முற்பகல் 10–55

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னசத்திரத்திலே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், என்னுடைய தொகுதிக்குட்பட்ட பீமாண்டபள்ளி ஊராட்சி, பாரைக்கொட்டாயில் சுமார் 71 குடும்பங்கள் 50, 60 ஆண்டுக் காலமாக வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் வீடுகள் கட்டி, மின்னிணைப்புப் பெற்று, வீட்டு வரி செலுத்தி அனைத்து வசதிகளையும் பெற்று வருகிறார்கள். சிலர் அங்கே தார்சு வீடுகளைக் கட்டிவிட்டார்கள். எனவே, அவர்களுக்கும் மற்றும் தார்சு வீடுகள் கட்டாமல் குடிசை வீட்டில் குடியிருந்து வரும்

அந்த ஏழைகளுக்கும் அதே இடத்திலே பட்டா வழங்கினால் ஏதுவாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, கால்நடை பராமரிப்புத் துறையிடமிருந்து சிறப்பு அனுமதியைப் பெற்று, அங்கே குடியிருப்பவர்களுக்கு அங்கேயே வீட்டுமனைப் பட்டா வழங்கினால் ஏதுவாக இருக்கும். ஏனென்று கேட்டால், அவர்கள் மிகவும் ஏழ்மையான நிலையிலே, கூலித் தொழிலாளர்களாக இருந்து வருகிறார்கள். அதே இடத்திலே, அதே கிராமத்திலேதான் அவர்கள் ரேஷன் பொருட்களை வாங்கி வருகிறார்கள். ஆகவே, அதே இடத்தில் அவர்களுக்குப் பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அருகிலே இருக்கக்கூடிய சென்னசத்திரம் கிராமத்திலே இடம் வழங்குகிறோம் என்று அரசின் சார்பிலே சொல்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையைப் போன்றே, எங்களுக்கு இங்கேயே இடம் வேண்டுமென்று அந்தப் பகுதி மக்களெல்லாம் நேரிலே வந்து, அத்தனை பேருமே கையொப்பமிட்டு கோரிக்கை மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். கால்நடை பராமரிப்புத் துறையிலே விதி இருக்கின்றது. இந்த விதியைத் தளர்த்தி கொடுப்பதற்காகத்தான் அரசு புறம்போக்கு நிலங்களிலே நீண்ட கால குடியிருப்புகளாக உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பாக அரசாணை நிலை எண் 496 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. அரசாணை நிலை எண் 496–ல், மேய்க்கால், மந்தைவெளி மற்றும் சாலைகள் போன்ற மற்ற ஆட்சேபணை உள்ள புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களுக்கு, அதே முறையில் முடிந்த அளவிற்கு மாற்று இடம் கண்டறிந்து, குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளில் அவர்களைக் குடியமர்த்தலாம் அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மிக நீண்ட காலமாக இந்த நிலத்திலே வசிப்பவர்களுக்குத் தவிர்க்க முடியாத இனங்களிலே, அதே இடத்தினை வரன்முறைப்படுத்த இயலுமா என்பது குறித்தும் அல்லது அதே இடத்தில் தமிழ்நாடு

2019 ஜூலை 15]

குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடி கட்டடங்கள் கட்டி அதிலே குடியமர்த்துவது குறித்தும் ஆய்வு செய்து, மாநில அளவிலான குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பலாம் என்கின்ற அரசாணையின் கால அவகாசம் தற்போது முடிவடைந்துள்ளது. கால அவகாசம் நீட்டிப்பிற்காக அந்தக் கோப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு அனுப்பி, அனுமதி பெற்றதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்த விதிமுறைகளின் அடிப்படையிலே பட்டா வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.*

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி தாலுகா, கும்பளம் கிராமம் சர்வே எண்கள் 74/1, 9, 10, 13, 14 மற்றும் புதிய சர்வே எண்கள் 118 முதல் 187 வரை ஒதுக்கப்படாத புறம்போக்கு காடுகள் என்று கிராம கணக்குகளில் உள்ளது. இதில் 70 வருடங்களாக, மூன்று தலைமுறைகளாக 145 குடும்பங்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். இவர்கள் ஏழை விவசாயிகளாக அங்கே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களும் அங்கேயே தார்சு வீடுகள் கட்டி, அரசினுடைய நலத் திட்டங்களை எல்லாம் பெற்று வருகிறார்கள். அவர்களுக்கும் அங்கே பட்டா வழங்குவதற்காக, நம்முடைய வருவாய்த் துறையின் சார்பாக நில அளவை செய்யப்பட்டு, கோப்பு தயார் நிலையிலே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் கவனத்திலே கொண்டு அவர்களுக்கும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோல சூளகிரி தாலுகா, பெத்தசிகரலப்பள்ளி ஊராட்சி, கொட்டாயூர் என்ற கிராமத்திற்கு வனத் துறையினர் NOC கொடுத்திருக்கிறார்கள். கொட்டாயூர் கிராமத்திலே சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அவர்களும் 70, 80 ஆண்டுகளாக அங்கேயே இருந்து வருகிறார்கள். அவர்களும் மின்னிணைப்பு போன்ற அனைத்து வசதிகளையும் பெற்றிருக்கிறார்கள்.

ஆகவே, கொட்டாயூர் கிராமத்தில் வாழ்பவர்களுக்கும் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. பி. முருகன்: அதேபோல் எங்களுடைய வேப்பனஹள்ளி தொகுதியில் உள்ள சின்னபத்தனப்பள்ளியில் சுமார் 18 குடும்பங்கள் 60 ஆண்டுகாலமாக வாழ்ந்து வருகின்றார்கள். அதேபோல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், ஒரு கேள்வியை எவ்வளவு நேரம் கேட்பீர்கள்? (குறுக்கீடு) இல்லை, இல்லை. எவ்வளவு நேரம் கேட்பீர்கள்?

திரு. பி. முருகன்: உடனே முடித்துவிடுகின்றேன். ஆகவே அந்தக் கிராமங்களுக்கும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களால் வேறு யாருக்கும் என்னால் வாய்ப்பு தர முடியாமல் போகின்றது பாருங்கள். சுருக்கமாகக் கேட்டுப் பழகுங்கள்.

திரு. பி. முருகன்: எங்களுடைய தொகுதியில் நான் கேட்டிருக்கின்ற பகுதிகளுக்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டா வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு இதே அவையில் நான் மாண்புமிகு அமைச்சரிடத்தில் ஒரு கோரிக்கை வைத்தேன். அதாவது எங்களுடைய சூளகிரி தாலுகாவிற்கு புதிய கட்டடம் வேண்டும் என்று கேட்டேன். அந்தக் கோரிக்கையை ஏற்று புதியதாக, அழகாகக் கட்டடம் கட்டி முடித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனைத் திறந்தும் வைத்திருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில் அங்கே மிகப் பெரிய, அழகாக இருக்கின்ற அந்த வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 8 அடி அளவில் ஒரு compound wall . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகன், உட்காருங்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 15]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளையெல்லாம் வரன்முறைப்படுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்குகிற நிலையில் இருக்கிறது. ஆகவே, அதனை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்கக்கூடிய அந்த ஆய்வுகளுக்காகத்தான் இரண்டு அரசாணைகள் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன. அரசாணைகள் 496, 465 ஆகிய இரண்டிற்குமான கால அவகாசம் முடிந்துவிட்ட காரணத்தினால், கால அவகாச நீட்டிப்பிற்காக கோப்புகள் தற்போது பரிசீலனையில் இருக்கின்றன. அந்த இரண்டு அரசாணைகளையும் மீண்டும் வெளியிடுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அனைத்தையும் வரன்முறை செய்து, வீட்டுமனைப் பட்டா வழங்குகிற அனைத்து கோரிக்கைகளையும் பரிசீலனைக்கு எடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, அவர் வைத்த கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றித் தந்தது என்று இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். சொன்னதையும் செய்கிற அரசு, சொல்லாததையும் செய்கிற அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு இன்றைக்கு அவரே ஓர் ஒப்புதல் வாக்குமூலமாகக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அவைக்கு எடுத்துவைத்து, வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

109—

சார்-பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***41287—திரு. கே.எஸ். மஸ்தான்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—